**ஜனவரி – 05**

# TNPSC துளிகள்

- இந்தியாவின் மிகப்பெரிய எண்ணெய் நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் (IOC – Indian Oil Corporation) ஆனது தமிழ்நாட்டின் எண்ணூரில் உள்ள அதன் ரூ 515 கோடி மதிப்புடைய முதல் திரவ இயற்கை எரிவாயு (LNG) இறக்குமதி முனையத்தின் செயல்பாட்டினை அறிவித்துள்ளது.
    - இந்த LNG இறக்குமதி முனையமானது IOC ஆல் சொந்தமாகக் கட்டப்பட்ட முதல் இறக்குமதி முனையமாகும்.
- குஜராத் கல்வி வாரியமானது குஜராத்தின் அரசுப் பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கு தேச பக்தியை வளர்ப்பதற்காக வகுப்புகளில் தங்கள் வருகைப் பதிவு அழைப்புகளுக்கு 'உள்ளேன் அய்யா' எனக் கூறுவதற்குப் பதிலாக 'ஜெய்ஹிந்த்' அல்லது 'ஜெய்பாரத்' எனக் கூற வேண்டுமென சமீபத்தில் உத்தரவிட்டுள்ளது.
- விஜலாபுரம் கிராமத்தில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான குப்பம் விமான நிலைய ஓடுபாதைத் திட்டத்திற்கு ஆந்திர முதல்வர் அடிக்கல் நாட்டியுள்ளார்.
- ஆஸ்திரேலிய மண்ணில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான டெஸ்ட் போட்டியில், 100 ரன்களை குவித்த முதல் விக்கெட் கீப்பர் மட்டையாளராக இந்தியாவின் ரிஷப் பந்த் உருவெடுத்துள்ளார்.
- நீதிபதி ஆசிப் சாயித் கோசா பாகிஸ்தானின் புதிய தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தற்போதுள்ள தலைமை நீதிபதியான சாகிப் நிசார் என்பவருக்கு அடுத்துப் பதவியேற்கவுள்ளார்.
- தமிழ்நாடு அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப கழகத்தின் துணைத் தலைவராக மயில்சாமி அண்ணாதுரையை தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது.
- தில்லியில் உள்ள இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையமானது அதி நவீன ஆயுதங்களுடன் கூடிய 6 குண்டு துளைக்காத வாகனங்களைப் பெற உள்ள முதல் விமான நிலையமாக மாற உள்ளது.
- கோயம்புத்தூர் விழாவின் 11-வது பதிப்பானது ஜனவரி 03 அன்று கோயம்புத்தூர் வஉசி பூங்காவில் தொடங்கியது. ஒரு வாரக் காலத்திற்கு நடைபெறும் இந்நிகழ்ச்சியானது இந்திய தொழில் கூட்டமைப்பு மற்றும் யங் இந்தியன் (YI – Young Indian) ஆகியவற்றால் நடத்தப்படுகிறது. இது ஜனவரி 12 வரை நடைபெறும்.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழக சட்டசபை கூடுகை

- தமிழக சட்டசபைக் கூட்டமானது 2019 ஜனவரி 02 அன்று வழக்கமான ஆளுநரின் புதிய வருட உரையுடன் தொடங்கியது.
- இந்த சட்டசபை கூடுகையானது ஜனவரி 08 வரை தொடரும்.
- சபாநாயகர் P. தனபால் தலைமையிலான அலுவல் ஆலோசனைக் குழு கூட்டத்தில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது.

## இந்தியாவின் முதல் 10 மாவட்டங்கள்

- குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகமானது 10 நாட்கள் நடைபெறும் (நவம்பர் 09 முதல் 19 வரை) போட்டியினை உலக கழிப்பறைத் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்திருந்தது.
- இந்த அமைச்சகமானது முதல் பத்து இடங்களைப் பிடித்த 12 மாவட்டங்களின் (கூட்டு வெற்றியாளர்கள் உட்பட) பட்டியலை வெளியிட்டது.
- தமிழ்நாட்டின் சேலம் மாவட்டமானது உலக கழிப்பறை தினப் போட்டியில் முன்னணி 12 மாவட்டங்களில் ஒன்றாக இடம் பிடித்துள்ளது.

| |
|---|
| Bankura, West Bengal |
| Ganderbal, Jammu and Kashmir |
| Ghaziabad, Uttar Pradesh |
| Hazaribagh, Jharkhand |
| Jehanabad, Bihar |
| Kandhamal, Odisha |
| Kodagu, Karnataka |
| Lohardaca, Jharkhand |
| Murshidabad, West Bengal |
| Salem, Tamil Nadu |
| Sangli, Maharashtra |
| South West Khasi Hills, Meghalaya |

# தேசியச் செய்திகள்

## அணுசக்தி அல்லாத தாக்குதல் ஒப்பந்தம்

- இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தங்கள் அணு ஆயுதங்களின் பட்டியலைப் பரிமாறிக் கொண்டன.
- பாகிஸ்தான் மற்றும் இந்திய நாடுகளுக்கிடையேயான அணுசக்தி நிறுவல்கள் மற்றும் அணுசக்தி வளாகங்களுக்கு எதிரான தாக்குதல்களுக்கான தடை ஒப்பந்தத்தின்படி இந்த பரிமாற்றமானது செய்து கொள்ளப்பட்டது.
- இந்த ஒப்பந்தமானது அணுசக்தியில்லாத தாக்குதல் ஒப்பந்தம் எனவும் குறிப்பிடப்படுகிறது.
- 1988 டிசம்பர் 31-ல் கையொப்பமிடப்பட்டு 1991 ஜனவரி 27 ஆம் நாள் நடைமுறைக்கு வந்த இந்த ஒப்பந்தத்தின்படி ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 01 ஆம் தேதி இந்த பரிமாற்றம் நிகழ்கிறது.

### RTE திருத்த மசோதா

- குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான உரிமைகள் (திருத்தம்) மசோதா 2018க்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த மசோதாவானது பள்ளிகளில் செயல்படுத்தப்படும் இடைநிறுத்தம் இல்லாத கொள்கையை ("no-detention" policy) திருத்தம் செய்ய முயற்சிக்கிறது.
- சட்டத்தின் தற்போதைய அம்சங்களின்படி எந்தவொரு மாணவரையும் 8 ஆம் வகுப்பு வரை இடையில் நிறுத்த முடியாது.
- இந்த திருத்த மசோதாவானது இடைநிறுத்தும் கொள்கையைத் தொடர்வது குறித்து முடிவெடுக்கும் அதிகாரத்தை மாநிலங்களுக்கு வழங்குகிறது.
- நாட்டின் கல்வி முறையை மறுகட்டமைப்பதே இந்த நடவடிக்கையின் முக்கிய நோக்கமாகும்.

### NCTE திருத்தச் சட்டம்

- 2018 ஆம் ஆண்டிற்கான ஆசிரியர் கல்விக்கான தேசிய கழக (National Council for Teacher Education-NCTE) திருத்த மசோதாவிற்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.
- NCTE உருவாக்கப்பட்டது முதல் இந்த 2017-18 கல்வியாண்டு வரை ஆசிரியர் கல்வி படிப்புகளை வழங்கும் நிறுவனங்களுக்கு பின்னோக்கிய அங்கீகாரத்தை இந்த மசோதா வழங்குகிறது.
- மேலும் இந்த மசோதாவானது NCTE உருவாக்கப்பட்டது முதல் இந்த 2017-18 கல்வியாண்டு வரை ஒரு புதிய படிப்பு அல்லது ஆசிரியர் கல்வி படிப்புகளைத் தொடங்குவதற்குப் பின்னோக்கிய அனுமதியையும் அளிக்கின்றது.

## சர்வதேசச் செய்திகள்

### ஆசியா மறுசீரமைப்பு முன்முயற்சி சட்டம்

- ஆசிய மறுசீரமைப்பு முன்முயற்சி சட்டத்தில் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.
- இந்தச் சட்டமானது அமெரிக்காவின் பாதுகாப்பு, பொருளாதார நலன்கள் மற்றும் இந்தோ பசிபிக் பிராந்தியங்களின் விழுமியங்கள் ஆகியவற்றை அதிகரிப்பதற்காக ஒரு பன்முகப்படுத்தப்பட்ட அமெரிக்க யுக்தியை உருவாக்குகிறது.

***<u>முக்கிய சிறப்பம்சங்கள்</u>***

- இந்தச் சட்டமானது கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் உள்ள அமெரிக்கத் திட்டங்களுக்கு 1.5 பில்லியன் டாலர் வரை செலவிட அங்கீகாரம் வழங்குகிறது.
- அதிகபட்ச அழுத்தம் மற்றும் இணைந்து செயல்படுதல் ஆகியவற்றின் மூலமாக வடகொரியாவை சமாதானமான அணு ஆயுதமற்ற நாடாக மாற்றுவதற்கான கொள்கை இலக்குகளை இச்சட்டம் நிறுவுகிறது.
- தைவானுக்கு வழக்கமான ஆயுத விற்பனை மற்றும் தைவானுக்கும் அமெரிக்காவிற்கும் இடையேயான உறவை மேம்படுத்துவதற்கான ஆதரவை இச்சட்டம் வெளிப்படுத்துகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## பரிவேஷ்

- தொழிலகங்களுக்குச் சுற்றுச்சூழல் அனுமதியை உடனடியாக மற்றும் விரைவாக வழங்குவதற்காக வலைதள அடிப்படையிலான ஒற்றைச் சாளர அமைப்பான பரிவேஷ் என்ற வசதி அனைத்து மாநிலங்களிலும் ஜனவரி 15 ஆம் தேதி முதல் திறக்கப்படவுள்ளது.
- ஊடாடும், நல்ல மற்றும் சுற்றுச்சூழல் ஒற்றைச் சாளர மையம் மூலமாக செயல்திறன் மற்றும் பொறுப்பான வசதி என்பது பரிவேஷ் என்ற சொல்லின் விளக்கமாகும் (Parivesh - Pro-Active and Responsive facilitation by Interactive, Virtuous and Environmental Single-window Hub).
- இந்த அமைப்பானது, தேசிய தகவல் மையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் மத்திய சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தினால் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.
- இது பல்வேறு ஆணையங்களிடமிருந்து சுற்றுச்சூழல், வனங்கள், வன உயிரிகள் மற்றும் கடலோர ஒழுங்காற்றுப் பகுதி ஆகியவற்றின் ஒப்புதலுக்காக ஏற்படுத்தப்படும் முன்மொழிவுகளை சமர்ப்பித்தல், ஒப்புதல் பெறுதல், முன்மொழிதல் ஆகியவற்றினைக் கண்காணிப்பதற்கான ஒரு தானியங்கி அமைப்பாகும்.




# மாநிலச் செய்திகள்

## ACI-ன் தொழில் தொடங்குவதற்கு உகந்த குறியீடு

- சிங்கப்பூரின் ஆசியப் போட்டி நிறுவனமானது (Asia Competitiveness Institute's-ACI) 2018 ஆம் ஆண்டுக்கான தொழில் தொடங்குவதற்கான குறியீட்டின் சமீபத்திய தரவரிசையை வெளியிட்டுள்ளது.
- இந்தியாவில் தரவரிசைக்கு உட்படுத்தப்பட்ட 21 மாநிலங்களில் ஆந்திரப் பிரதேசம்

முதலிடத்தில் உள்ளது.

- மகாராஷ்டிரா மற்றும் டெல்லி ஆகியவை முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளன.
- 2016 ஆம் ஆண்டு 5-வது இடத்தில் இருந்த ஆந்திரப் பிரதேசமானது 2018-ல் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது.

### உலக புத்தக கண்காட்சி

- புதுடெல்லியின் உலக புத்தகக் கண்காட்சியானது சமீபத்தில் பிரகதி மைதானத்தில் நடைபெற்றது.
- 27-வது புத்தகக் கண்காட்சியின் கருத்துருவானது, "சிறப்பு தேவைகளைக் கொண்ட வாசகர்கள்" (Readers with special needs) என்பதாகும்.
- UAE-யின் 3-வது பெரிய அமீரகமான ஆன ஷார்ஜா இந்த புத்தகக் கண்காட்சியின் கௌரவ விருந்தினர் ஆகும்.

## பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

### வீரதீரச் செயலுக்கான தேசிய விருது

- மணிப்பூரின் வாஹென்பாம் லாம்கான்பா (15) வீர தீரச் செயலுக்கான தேசிய விருதுக்காக இந்திய குழந்தைகள் நல வாரியக் குழுவால் (Indian Council for Child Welfare-ICCW) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இவர் இரண்டரை வயதான தமது நெருங்கிய உறவினரின் குழந்தையைக் குளத்தில் மூழ்குவதிலிருந்து காப்பாற்றியதால் இந்த கௌரவத்தினைப் பெறுகிறார்.
- இந்த விருதுகளானது ஒவ்வொரு ஆண்டும் குடியரசுத் தினத்தன்று இந்திய குழந்தைகள் நல வாரியக் குழு என்ற அமைப்பின் கீழ் வழங்கப் படுகின்றது.
- பாரத் விருது, சஞ்சய் சோப்ரா விருது, கீதா சோப்ரா விருது, பாபு கைதானி விருது மற்றும் பொதுவான வீர தீரத்திற்கான தேசிய விருது என இந்த விருதுகள் 5 வகையாக பரவலாக வகைப்படுத்தப் பட்டுள்ளன.

### வின்சன் மலை மீது ஏறிய உலகின் முதல் கால்களை இழந்த பெண்

- அருணிமா சின்ஹா அண்டார்டிகாவின் மிக உயர்ந்த மலைச் சிகரமான வின்சன் மலையில் ஏறிய முதல் கால்களை இழந்த பெண் எனும் சாதனையைப் படைத்துள்ளார்.



- 2013 ஆம் ஆண்டில் எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைந்த கால்களை இழந்த முதல் பெண்ணான இவர் பத்மஸ்ரீ விருதினைப் பெற்றுள்ளார்.
- ஏழு கண்டங்களில் உள்ள ஏழு

சிகரங்களின் உச்சியை அடைவதே இவரின் நோக்கமாகும்.

- இவர் ஏற்கனவே எவரெஸ்ட், கிளிமாஞ்சாரோ, எல்ப்ரஸ், கோசியுஸ்கோ மற்றும் அகன்காகுவா ஆகிய 5 சிகரங்களின் உச்சியை அடைந்துள்ளார்.

# முக்கிய தினங்கள்

## உலக பிரெய்லி தினம்- ஜனவரி 04




- ஐ.நா. சபையானது முதல் அலுவல் பூர்வமான உலக பிரெய்லி தினத்தினை 2019 ஜனவரி 04 ஆம் நாள் அனுசரித்தது.
- கண்பார்வை குறைபாடு உள்ளவர்களுக்காக பிரெய்லி முறையைக் கண்டறிந்தவரான லூயிஸ் பிரெய்லியின் பிறந்த நாளினை நினைவு கூறும் விதமாக இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இது சில வகையான கிட்டப்பார்வை அல்லது தூரப்பார்வையைக் கொண்ட ஏறக்குறைய 1.3 பில்லியன் மக்களுக்கு பிரெய்லியின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப்படுகிறது.
- லூயிஸ் பிரெய்லி, 1809 ஆம் ஆண்டு ஜனவரி 04 அன்று பிரான்ஸில் பிறந்தார். இவர் தனது 3-வது வயதில் கண் பார்வையை இழந்தார்.

- - - - - - - - - - - - - - -